மேட்டூர் அருகே

சோரகை மலையில் சேலம் கலெக்டர் ஆய்வு!

சுற்றுலா தலமாக்க பொதுமக்கள் கோரிக்கை!!

மேச்சேரி நவ:07, மேட்டூர் அருகே நங்கவள்ளி, மலையடிப்பட்டியில் அறநிலையத்துறைக்கு சொந்தமான சோரகைமலை வேட்டராய பெருமாள் மலை கோவில் உள்ளது. இந்த கோவில் வளப்பகுதியில் அமைந்துள்ளதால் வனத்துறையினர் கோவில் கட்டுமானத்திற்கும், பொது மக்கள் வந்து செல்லும் பாதையை தடுக்கும் செயலிலும் ஈடுபட்டு வந்ததை தொடர்ந்து கோவில் நிர்வாகத்தின் சார்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம் உடனடியாக ஆறு வார காலத்திற்குள் மாவட்ட நிர்வாகம் உரிய விசாரணை நடத்தி பட்டா வழங்க வேண்டும் என உத்தரவிட்டது.

நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அதற்கான பணிகள் நடைபெற்று முடிந்துள்ள சூழலில் இவ்வூரு ஒரு வார காலத்திற்குள் பட்டா வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் கோவில் அமைந்துள்ள சோரகை மலையில் ஆய்வு மேற்கொள்ளவும், நடைபயிற்சி செய்யவும் வந்த மாவட்ட ஆட்சி தலைவர் பிருந்தா தேவி நேற்று இரவு கோவில் அடிவாரத்தில் இருந்து மாவட்ட வருவாய் ஆய்வாளர் தலைமையில் மலை வரை வருவாய்த்துறையினர், காவல் துறையினர், வனத் துறையினர் மற்றும் ஊரக நிலவரி ஆய்வாளர் ஆகியோர் சேர்ந்த அதிகாரிகள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் நடைபயிற்சி மேற்கொண்டனர். அதிகாரிகளின் மலை அழுத்தத்தை குறைக்கும் வகையிலும், உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையிலும் சேலம் மாவட்டத்தில் உள்ள பல்வேறு மலைக்கோவில், மலை கிராமங்களுக்கு சென்று வருகின்றனர். இந்த நிலையில் நேற்று சோரகை மலையில் சுமார் 4 கி.மீ. மண் சாலையில் 1 மணி நேரம் நடந்து சென்று மலை மேல் உள்ள வேட்டராய பெருமாள் கோவிலை சென்றடைந்தார். அங்கு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் செயல் அலுவலர் ஜீவானந்தம் மாவட்ட ஜீவானந்தம் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து அரசு அதிகாரிகளுக்கு சிறப்பான வரவேற்பு மற்றும் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. பின்னர் வேட்டராய பெருமாள் கோவிலில் சாமி தரிசனம் செய்தனர். அதனைத் தொடர்ந்து கோவில் நிர்வாகம் சார்பில் நடைபெற்ற சிறப்பு பூஜையில் மலையடிற்கத்தில் ஈடுபட்ட அனைவரும் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இந்த நிகழ்சியில் வருவாய்த் துறை, காவல்துறை, வனத் துறை, தீயணைப்புத்துறை மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர்கலந்து கொண்டனர்.

சோரகைமலைக்குவந்த மாவட்ட ஆட்சியர் பிருந்தா தேவியிடம் சோரகை வேட்டராய பெருமாள் கோவில் அமைந்துள்ள இந்த வனப் பகுதியை சுற்றுலாத்தலமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை வைத்தனர்.

இதுகுறித்து உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் பிருந்தா தேவி உறுதியளித்து சென்றார்.

திகழ்வில் மேட்டூர் கோட்டாட்சியர் சுகுமார், மேட்டூர் வட்டாட்சியர் ரமேஷ், மேட்டூர் வருவாய் ஆய்வாளர் வெற்றிவேல் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் வழங்கும் பணியை சேலம் மத்திய மாவட்ட செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் பல்வேறு பகுதிகளுக்கும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

சேலம் 42—வது கோட்டத்தில்

வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி; அமைச்சர் ராஜேந்திரன் ஆய்வு!

சேலம் நவ 07 சேலம் மாநகராட்சி 42 வது கோட்டத்திற்குட்பட்ட நாராயண நகர், சின்ன மாரியம்மன் கோவில் தெரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வாக்களர் பட்டியல் கணக்கீட்டுக்ான படிவம் வழங்கும் பணி நடக்கிறது.

இதில் பணியை அமைச்சர் ராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட பின் கற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் இந்த பணியினை மிகுந்த கவனத்தோடு மேற்கொள்ள வேண்டும் என்று இமுக வாக்குச்சாவடி முகவர்களிடம் ஆலோசனைவழங்கினார். நிகழ்ச்சியின் போது சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. பொருளாளர் கார்த்திகேயன், தெற்கு தொகுதி மேலிட பார்வையாளர் பார் இளங்கோவன், ஒமலூர் தொகுதி பார்வையாளர் சுகவனம், சேலம் மாநகர துணை செயலாளர் கணேசன், மண்டல குழு தலைவர்கள் தனசேகரன் அசோகன் உள்ளிட்ட பலரும் உடன் இருந்தனர்.

சேலம்

சேலம் அரசு மருத்துவமனையில் சேதமடைந்த கான்கிரீட் மேற்கூரை!

நோயாளிகள் அச்சம்!!

சேலம் நவ 06 சேலம் அரசு மருத்துவமனையில் உள் மற்றும் புற நோயாளியாக ஏராளமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இங்கு இவர்களுக்கு பல்வேறு அதிநவீன சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களை பாப்பதற்காக உறவினர்கள் பலரும் இனந்தோறும் வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் சேலம் அரசு மருத்துவமனையில் தோல் மற்றும் பால்வினை செயல் பட்டு வருகிறது. இந்த சிகிச்சை பிரிவு செயல்படும் கட்டடம் ஆனது மிகவும் பழமையானது. ஆகவால் கான்கிரீட் கட்டடத்தில் மேல் தளம் பாதிப்புக்கு உள்ளாகியுள் ளது. எனவே நேற்று பெய்த மழை நீர் சிகிச்சை வார்டுக்கு உள்ளே ஒழுகியது. மேலும் கட்டடத்தில் கான்கிரீட் உடைந்து கம்பி

கள் தெரிவதால் சிகிச்சைக்காக வரும் பொதுமக்கள் இதனை பார்த்து அச்சப்படு கின்றனர்.

இதனால் ஏதேனும் விபத்து ஏற்படும் முன்னர் இந்தக் கட்டடத்தை புனரமைக்க வேண்டும்.

அல்லது மாற்று இடத் திற்கு மாற்றியோ சிகிச்சை அளிக்க வேண்டும் என பொதுமக்கள் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடத்தூர் அருகே

இருசக்கர வாகனம் மோதி கூலித்தொழிலாளி பலி!

கடத்தூர் நவ.7 தர்மபுரி மாவட்டம் கடத்தூர் அடுத்த அய்யம்பட்டி செங்கல்நத்தர் சேர்த்த கூலித் தொழிலாளி .வெலிங்கம் (60).இவர் தனது வேலையை முடித் துவிட்டு புட்டி ரெட்டி பட்டி தாளந்தம் சாலையில், சென்னும்பொழுது கடத்தூர்பஞ்சுமில்இருந்து புட் டி ரெட் டி ப் பட் டி நோக்கி வந்த இருசக்கர வாகனம் அவர் மீது மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இருசக்கர வாகன ஓட்டி காயமடைந்து மருத்துவம னையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் .

சிவலிங்கம் உடலை மீட்டு கடத்தூர் போலீசார் பிரேத பரிசோதனைக்காக தர்மபுரி அரசு மருத்துவம னைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

லாரி மீது அரசு பஸ் மோதல்:

பஸ் டிரைவர் உள்பட 2 பேர் பலி!

எட்டையாபுரம் அருகே விபத்து!!

கோவில்பட்டி, நவ. 7– மதுரையில் இருந்து நேற்று மாலை திருச்செந்தூர் நோக்கி அரசு பேருந்து 15 பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்றுள்ளது. பேருந்து தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே கிரித லக்கிரை பகுதியில் வந்து கொண்டிருந்தபோது நெடுஞ்சாலையில் திறந்து நெடுஞ்சாலையில் குறுக்கே வந்த ஒரு மாடு மோதி விபத்துக் குள்ளானது. இதில் பேருந்தின் முன் பகுதி அப்பளமாக நொறுங்கியது. முன்பகுதியில் இருந்த பயணிகள் சிலர் மற்றும் டிரைவர் வெளியே வர முடியாமல் பரிதவித்தனர். இது குறித்து அருகில் இருந்தவர்கள் எட்டையாபுரம் காவல் நிலையம் மற்றும் கோவில்பட்டி தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் வழங்கியதையடுத்து. கோவில்பட்டி தீய

திருமண் கே. கந்தசேரல்வரபுரத்தை சேர்ந்த கார்த்திக் (29), காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அத்தனசேரியகுதியைச் சேர்ந்த ஸ்டாலின் (45) , மும்பை மட்டுங்கா பகுதியைச் சேர்ந்த மகேஷ் (33), ஏர் இந்தியா விமானத்தில் ஏர் பய்லட்டாக இருக்கும்அவரதுமனைவி வி வி தா (3 1) , தூத்துக்குடியை சேர்ந்த மருத்துவர்சேனுஷாதேவி, எடப்பாடியைச் சேர்ந்த லோகேஸ்வரன் (33) மதுரை மேலூரைச் சேர்ந்த பாண்டியன் (34) ஆகியோருக்கு பலத்த காயம் ஏற்பட்டது.

காயம் அடைந்த பேருந்து ஓட்டுனர் நல்லு சாமி, நடத்துனர் ஜெயராமன், கார்த்திக், ஸ்டாலின் ஆகிய நான்கு பேரும் கோவில்பட்டி அரசு மருத்து வமனையில் பேருந்து ஓட்டுநர் நல்லுசாமி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

இதேபோன்று மகேஷ், அவரது மனைவி விஎிதா, மருத்துவர் சேனுஷாதேவி ஆகியோர் எட்டையாபுரம் அரசு மருத்துவமனை யில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் மகேஷ் சிகிச்சை பலன் இன்றி பரிதாபமாக உயிரி ழந்தார்.

லோகேஸ்வரன் மற்றும் பாண்டியன் ஆகிய இருவரும் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத் துவமனைக்கு அனுப்பப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இறண்டு பேர்உயிரிழந்த நிலையில் 7 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் விபத்து குறித்து எட்டயபுரம் பேலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் புதிய வழிதடத்திற்கு 4 புதிய பேருந்துகளின்சேவையை,ஒகுர்நகரபேருந்துநிலையத்திலிருந்துமாவட்டசெயலாளரும் ஒகூர் சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ், மாநகர செயலாளரும் மேயருமான சத்யா ஆகியோர்,கொடியசைத்துதொடங்கிவைத்தனர்.இந்நிதிகழ்வில்மாவட்டஅவைத்தலைவர் புவரசு,மாவட்டபொருளாளர்சுகுமாரன்,துணைமேயர்ஆனந்தய்யா,பகுதிசெயலாளர்கள் வெங்கடேஷ், ராமு, ராஜா, மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை செயலாளர் மாதேஸ்வரன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ஜெயலலிதாவை சிறைக்கு அனுப்பிய பாவம் உங்களை சும்மா விடாது:

அ.தி.மு.க.வை டி.டி.வி.தினகரன் அபகரிக்க நினைத்தார்!

ஆர்.பி. உதயகுமார் குற்றச்சாட்டு!!

மதுரை நவ 7 மதுரையில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர். பி.உதயகுமார் அளித்த பேட்டியில் கூறியதாவது:

ஜெயலலிதாவால் ஆண்டு காலம் அடிப் படைஉறுப்பினர்பொறுப் பிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டவர் இவரு ரன்.

இவர் இப்போது அதி முக பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி மீது அவதுறு பரப்புவதையே வேலையாக கொண்டிருக்கி றார். அதிமுக கொண்டர் கள் எல்லோரும் தலைவர் இல்லாத அனாதைகளாக இருப்பது போல அவர் பேசி கொண்டிருக்கிறார்.

மனோஜ் பாண்டியன் கட்ட ஞானம் கொண்ட வர். அவர் திமுகவுக்கு செல்றதற்கு கூட எடப் பாடி தான் காரணம் என வாய் கூசாமல் இனகரன் பொய் பேசுகிறார்.

திமுகவுக்கு செல்றதற்கு அதிமுகவை இனகரன் அப மானம் செலவு செய்யாமல் பணமோசடியில் ஈடுபட் டதாக குற்றச்சாட்டு எழுந் துள்ளது. இதுதொடர்பாக அமலாக்கத்துறை ஏற்கெ னவே சோதனை நடத்தி அனில் அம்பானி குழும நிறுவனங்களுக்கு சொந்த மான ரூ.7,500 கோடி மதிப்பிலான சொத்து களை முடக்கியுள்ளது.

இந்த நிலையில், பாரத ஸ்டேட் வங்கியில் (எஸ் பிஐ)கடன்பெற்றுமோசடி செய்து தொடர்பாக விசா ரணை நடத்த தயாம்.?? 14-ம் தேதி நேரில் ஆஜராகும் படி அனில் அம்பானிக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது. கடந்த ஜூலை 24-ம் தேதி நடை பெற்ற சோதனை தொடர் பாக அனில் அம்பானியி டம் ஆகஸ்ட் மாதம் விசாரணை மேற்கொள் ளப்பட்டு அவர் வெளி நாடு செல்ல தடைவிதிக் கப்பட்டது. இந்த நிலையில், இறண்டாவது முறையாக அவருக்கு அம லாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது குறிப்பி டத்தக்கது. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரி வித்தன.

சென்னை,நவ.7 மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் எம்.பி., பி றந்தநாளை யொட்டி, தமிழக முத லமைச்சர் மு . க.ஸ்டாலின் வாழ்த்து தெரி வித்துள்ளார். அது குறித்து அவர் கூறியதாவது :

பன்முகத்தி மை யோடு தமிழித் தியலுமை உல கத் தரத்துக்குக் கொண்டு சென்றிடும் தீராத கனவை தாகமும்பன்முகத்தன்மை மிக்க நம் நாட்டை நாசகர பாசிச சக்திகளிடமிருந்து மீட்டுக்கணியாகநாட்டுப் பற்றும் கொண்டு, என்மீது அ ள வற்ற அன்போடு தோழமை பாராட்டும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கலைஞாவி க ம ல் ஹ ா சன் அவர்களுக்கு அன்பு நிறை ந்த பிறந்தநாள் வாழ்த்துகள்!

நாடாளுமன்றத்தில் முழங்கிடும் தங்களது அரியவிரல் தொண்டும் நிரையாரம் தங்களது கலைத் தொண்டும் மென்மேலும் சிறந்திட வாழ்த்துகிறேன்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரள உள்ளாட்சித் தேர்தலில்

தி.மு.க., வி.சி.க., போட்டி!

இடுக்கி, நவ. 07 தமிழகத்தைத் தொடர்ந்து கேரளாவிலும் தங்கள் அரசியல் நகர்தலை விரிவுபடுத்தும் நோக்கில், நிராவிட முன்னேற்றக் கழகமும் (தி.மு.க), விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் (விசிக) இடுக்கி மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடத் திட்ட மிட்டுள்ளன.

இதுகுறித்து திமுகவின் இடுக்கி மாவட்டச் செயலாளர் கே.கே. ஜனார்த்தனன் வன் கூறுகையில், "மாவட்டத்தில் ஏற்கெனவே இரண்டுகட்சி அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில், தேமிகைத் தோட்டங்கள் அதிகம் உள்ள தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் முடிந்தவரை அதிக இடங்களில் திமுக தனது அதிகாரப்பூர்வ சின்னத்தில் போட்டியிடும்" என்றார். தேவிமுனம், உடும்பன்சோலை, மற்றும் பீர்மேடு தாலுகாக்களில் உள்ள பல வார்டுகளில் தமிழ் வாக்காளர்கள் பெரும் பான்மையாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோல, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் தேர்தலில் தங்கள் பணிகளை துவக்கி விட்டன.

இந்தியாவை

பாசிச சக்திகளிடமிருந்து மீட்கும் தணியாத நாட்டுப்பற்று கொண்டவர்!

கமலிறாவுக்கு, ஸ்டாலின் பிறந்நாள் வாழ்த்து!!







சேலம் தாதகாப்பட்டியில் சிறிய கைத்தறி பூங்கா!

அமைச்சர்கள் ராஜேந்திரன், காந்தி அடிக்கல் நாட்டினர்!!

சேலம் நவ 07 2023–2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவை நிதிநிலை அறிக்கையில் நிதி மற்றும் மனிதவளமேலாண்மைத்துறை அமைச்சரால் 'தமிழ்நாட்டில் 10 இடங்களில் தலா ரூபாய் ரூ.5 கோடி மதிப்பீட்டில் சிறிய அளவிலான கைத்தறி பூங்காக்கள் அமைக்கப்படும்' என அறிவிக்கப்பட்டது. அதன் தொடர்சியாக சேலம் மாவட்டம் தாககாப்பட்டி கிராமம் வனவாரி பகுதியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் காந்தி மற்றும் கற்றுலா துறை அமைச்சர் ராஜேந்திரன் ஆகியோரால் இன்று 10,000 சதுரஅடி பரப்பளவில் 'வனவாரி சிறிய அளவிலான கைத்தறி பூங்கா' அமைக்க பூமி பூஜை மற்றும் அடிக்கல் நாட்டப் பட்டது.

வனவாரி சிறிய அளவிலான கைத்தறி பூங்காவில் முதற்கட்டமாக 50 கைத்தறிகள் செயல்பட கூடிய வகையில் நெசவு தொழிற்கூடம், நெசவிற்கு முற்பகுதியான பட்டுநூலை பணிகளுக்கான அடிப்படை வசதிகள், மூலப்பொருட்கள் கிடங்கு, அலுவலகம் மற்றும் நெசவாளர்களுக்கு குடிநீர் வசதி, சிற்றுண்டி வளாகம், வாகன நிறுத்தம் வசதி, ஒய்வறை மற்றும் கழிவறை வசதிகளுடன் கட்டப்பட்டவுள்ளது. இதன் மூலம் கிழக்கு வை வாரி, மேற்கு வனவாரி, தங்கவளரி மற்றும் ஜலகண்டாபுரம் பகுதிகளிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழிவகைகள் செய்யப் பட்டுள்ளது. வனவாரி சிறிய அளவிலான கைத்தறி பூங்கா அமைப்பதன் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் 150 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும். மேலும், வனவாரி சிறிய அளவிலான கைத்தறி பூங்கா' அமைக்க பூமி பூஜை மற்றும் அடிக்கல் நாட்டப் பட்டது.

இதன் மூலம் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரம் மேம்படும். மேலும் வனவாரி சிறிய அளவிலான கைத்தறி பூங்காவில், பட்டுநூலை பணிகளுக்கான அடிப்படை வசதிகள், இலவுவி இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.653.22 இலட்சம் மதிப்பிலான ஜவுளி இரகங்கள் விற்பனை மேற்கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் 86 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.37.61 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் காந்தி மற்றும் கற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் ஆகியோர் வழங்கினர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் கைத்தறி துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வகணபதி, நாடாளுமன்ற வைத்தியநிதி, மாநிலங்களவைஉறுப்பினர் சிவலிங்கம், துறை இணை இயக்குநர் சுவேஸ்வர், கைத்தித் துறையுடனை இயக்குநர் முரீதர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

படேதலாவ் ஏரியில் இருந்து காட்டாகரம் வரை 13 ஏரிகளுக்கு செல்லும் கால்வாய் தூர்வரும் பணிகளை மதியழகன்எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

ராசிபுரம் அருகே

தீக்குளித்து பெண் தற்கொலை!

ராசிபுரம்,நவ.7– நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த சிங்களாந்தபுரம் மரியம்பட்டி கோவில்பிள்ளை தெரு சேர்ந்தவர் பணிவேல், 40. தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். இவர் மனைவி யசோதா, 38. இவர்களுக்கு கடந்த 15 வருடங்களுக்கு முன் மணிவேலுடன் கணவன் – மனைவிக்கு இடையே மோதல் ஏற்பட்டு வந்துள்ளது. அப்போது கோபித்து அங்கிருந்த 5 லிட்டர் மண் எண்ணையை சேரநாதனை உடல் ஊற்றி தீ வைத்துக்கொண்டார். தடுக்க சென்ற மணிவேல் மீதும் தீக்காயம் ஏற்பட்டது. இருவரையும் அக்கம் பக்கத்தினர் மீட்டு ராசிபுரம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். பரிசோதனை செய்த டாக்டர்கள் யசோதா ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். காயமடைந்த மணிவேலை மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். இது குறித்து பேசுக்குறிச்சி போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

சேலம் 42—வது கோட்டத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி; அமைச்சர் ராஜேந்திரன் ஆய்வு!

வாட்டர் கேன்களில் திருட்டு டீசல் வைத்து லாரிகளுக்கு விற்பனை செய்வதை படத்தில் காணலாம்.

காரிமங்கலம் பகுதிகளில் திருட்டு டீசல் விற்பனை!

வாட்டர் கேன்களில் வைத்து இரவு, பகலாக விளியோகம்!!

காரிமங்கலம், நவ.7, தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் கற்றுவட்டார பகுதிகளில் சமூக விரோத செயல்கள் அதிக அளவில் நடந்து வருகிறது.குறிப்பாகஅட்விரோதிருட்டு டீசல் விற்பனை கொடு கட்டி பறந்து வருகிறது. தர்மபுரி கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் திருட்டு டீசல் விற்பனை மையங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருந்துவந்த நிலையில் தற்போது சுமார் 50 க்கும் மேற்பட்ட இடங்களில் திருட்டு டீசல் விற்பனை ஜோராக நடந்து வருகிறது.

மாட்லாம்பட்டி, பெரியாம்பட்டி, பொன்னேரி, கெரகோட அள்ளி பைபாஸ் ரோடு ஆகிய பகுதிகளில் திருட்டு டீசல் விற்பனை மையங்களாக செயல்பட்டு வருகிறது. வெளி மாநிலத்துக்கு செல்லும் லாரி, டீஸ்லர் போன்ற வாகனங்களை மறைவான இடத்தில் வைத்து அதிலிருந்து டீசல் திருடப்பட்டு வருகிறது. இவ்வாறு திருடப்படும் டீசலுடன் மெகிக்கல் கலக்கப்பட்டு கள்ள மார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வோக்கல்வாகனங்கள்மற்றும்டிராக்டர்கள் போன்ற வாகனங்களுக்கு இரவு பகலாக 24 மணி நேரமும் டீசல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

திருட்டு டீசல் விற்பனைக்காக குடிநீரை மற்றும் கெட் அமைத்து காலி குடங்கள் மற்றும் கேன்களைரிக்கைவிளக்கு போல் அமைத்து டீசல் திருட்டு விற்பனையை குடிநீர கொழிலாக மாற்றிட்டனர். 2 வருடங்களுக்கு முன்பு திருட்டு டீசல் விற்பனையை தடுத்து நிறுத்த முயன்று வருவாய் துறை அதிகாரிகள் தாக்கப்பட்சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் திருட்டு டீசல் விற்பனையை தடுக்காமல் அதிகாரிகள் அலட்சியப் போக்குடன் இருந்து வருவதாக பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டி உள்ளனர். மாவட்ட நிர்வாகம் உரிய வகையம் செலுத்தி திருட்டு டீசல் விற்பனையை தடுத்து நிறுத்துவதுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாக்காளர் கணக்கெடுப்பு பணிக்கான

விண்ணப்பங்கள் விளியோகத்தை நாமக்கல் அதிகாரி ஆய்வு!

ராசிபுரம்,நவ.7– நாமக்கல் மாவட்டம் ராசிபுரம்(தனி) சட்ட மன்ற தொகுதிக்குட் பட்ட பகுதிகளில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து ராசிபுரம் நகராட்சி பகுதியில் பாகம் எண்.138 இல் உள்ள பி.எல்.ஒ. கணக்கெடுப்பு படிவங்கள் விநியோகம் குறித்து நாமக்கல் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர்பாதுகாப்பு அலுவலர் ஆய்வு செய்தார்.

இளைஞரணி துணை அமைப்பாளர் மா. கார்த்திக் மற்றும் சம்மந்தப்பட்ட பாகங்களின் அரசியல் கட்சி முகவர்கள் உடன் இருந்தனர்.

காவேரிப்பட்டணம்

பெண் கொலையில் கைதான தொழிலாளி பரபரப்பு வாக்குமூலம்!

காவேரிப்பட்டணம், நவ.7& இருஞ்ஞகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் அருகே உள்ள பள்ளி அள்ளி பக்கமுள்ளது நாசாகவல்கொட்டாய் இந்த ஊரை சேர்ந்தவர் பெருமாள். இவரது மனைவி நஞ்சம்மாள் (வயது 41). இவர் காவேரிப்பட்டணம் அருகே இம்மம்.மாபாம்.அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் மீன் கடை நடத்தி வருகிறார். நேற்று காலை 5 மணி அளவில் இவர் கடையில் இருந்த போது அங்கு வந்த நருவர் இவருடன் தகராறு செய்தார். சிறிது நேரத்தில் அவர் கருங்கல்லை தூக்கி நஞ்சம்மாள் தலையில் போட்டார்.

இதில் நஞ்சம்மாள் துடிதுடித்து இறந்தார். ரத்த வெள்ளத்தில் நஞ்சம்மாள் இறந்து கிடந்ததை அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் இது குறித்து காவேரிப்பட்டணம் போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று நஞ்சம்மாளின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

விசாரணையில் நேற்று முன்தினம் இரவு கண்டேபுரம் பகுதியை சேர்ந்த தொழிலாளி மாரியப்பன் (35) என்பவர் மீன் கடைக்கு வந்து சாப்பிட்டு விட்டு பணம் கொடுக்காமல் தகராறு செய்தது தெரிய வந்தது. இதை யடுத்து அவரை போலீசார் விசாரித்த போது அவர் நஞ்சம்மாளின் தலையில் கல்லை தூக்கி போட்டு கொலை செய்தது ஒப்புக் கொண்டார்.

இதையடுத்து மாரியப்பனை போலீசார்கைது செய்தனர். மாரியப்பன் போலீசில் அளித்துள்ள வாக்குமூலம் வருமாறு எனக்கு மது குடிக்கும் பழக்கம் உள்ளது. நான் இரவுமதுகுடித்துவிட்டு நஞ்சம்மாளின்கடைக்கு சென்று மீன் சாப்பிட்டேன். பணம் கொடுக்காமல் வந்ததால் என்னை அவர் திட்டினார்.

இதனால் நானும் அவரிடம் தகராறு செய்தேன். பின்னர் இரவு சென்று விட்டேன்.அதிகாலை 5 மணி அளவில் நான் மது குடிப்பதற்காக நஞ்சம்மாளின் கடை பக்கமாக வந்தேன். அந்த நேரம் அவர் அங்கிருந்த கட்டையால் என்னை அடித்து விட்டார். இதனால் நான் ஆத்திரத்தில் அங்கிருந்த கருங்கல்லை தூக்கி நஞ்சம்மாள் தலையில் போட்டு கொன்று விட்டேன். இவ்வாறு அவர் வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

TANEJA AEROSPACE AND AVIATION LIMITED

Regd. Office: Belagondapalli Village, Thally Road, Denkanikottai Taluk, Krishnagiri Dist., Belagondapalli - 635114, Tamil Nadu, India Phone : 91 4347 233 509, Fax : 91 4347 233 414 , E-mail : secretarial@tasl.co.in, Website : www.tasl.co.in, CIN : L62200TZ1988PLC014460

EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND PERIOD ENDED SEPTEMBER 30, 2025 (₹ LAKH)

Sr. No.	Particulars	Three Months Ended September 30, 2025 (Un-Audited)	Year Ended March 31, 2025 (Audited)	Three Months Ended September 30, 2024 (Un-Audited)
1	Revenue from Operations	969.13	4,061.69	1,011.94
2	Profit before exceptional items and tax	529.78	2,343.11	597.01
3	Profit before tax	529.78	2,343.11	597.01
4	Profit after tax	386.46	1,807.56	409.32
5	Total comprehensive income for the period	386.46	1,829.37	409.32
6	Paid up equity share capital (Face Value Rs. 5 per share)	1,275.03	1,275.03	1,275.03
7	Reserves exclu